A·T·R 338

2.524

உ

சிவமயம்

# ஸ்ரீ வடுக பைரவ கவசம்

உரையாசிரியர்:

வித்துவான் ந. சுப்பையபிள்ளை

வீரசைவகுரு
தற்பராநந்த தேசிகர்
பொன் விழா
வெளியீடு
1975-04-26

குகன் அச்சகம், தெல்லிப்பழை

உ
சிவமயம்

# பதிப்புரை

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளக்கும்
மறைமொழி தானே மந்திரம் என்ப
தொல்: பொருள்: 8: 171

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.
திருக்குறள்: 3: 8

நிறைமொழி என்பது அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தேவிடும் மொழி. —பரிமேலழகர்

மந்திரங்களின் பெருமை பெரிது; சக்தியோ அளவிலாதது. மந்திரங்களினாலாம் பயனை ஐம்பதாண்டுக்காலம் விதிப்படி உச்சாரணஞ் செய்துணர்ந்த வீரசைவகுரு ச. தற்பராநந்ததேசிகர், தமது பொன் விழாவையொட்டி, ஸ்ரீ வடுக பைரவ கவசம் வெளி வரல் வேண்டுமென விரும்பியதில் வியப்பேது. அவர் திருவுளப் பாங்கின் வண்ணமே அந்நூல் அவர் பொன்விழா நினைவாக மலர்ந்து மணம் வீசுகிறது.

உரை விளக்கம் வரைந்துதவிய வித்துவான் ந. சுப்பையபிள்ளை அவர்களுக்கும் குறுகிய காலத்துள் விரைந்து வனப்புற அச்சிட்டு வழங்கிய குகன் அச்சகத்தினருக்கும் 'என்னைகொல் கைம்மா றினி' என ஏங்கி உருகுகின்றோம்,

மாரியம்மன் தேவஸ்தானம்
கீரிமலை
75-04-26

பாராட்டு விழாச் சபையினர்

சிவமயம்

## வீரசைவகுரு ச. தற்பராநந்த தேசிகர்

# சில குறிப்புக்கள்

வீரசைவ மரபில் வந்த கும்பகோணம் அமிர்தராயக் குருக்களின் வழித்தோன்றல் விசுவநாதபரத்துக்கும் பொற்கலந்தம்பை கோணமலை கந்தையர் புதல்வி தெய்வானைப்பிள்ளைக்கும் அருந்தவப் புதல்வராகத் தோன்றியவர்.

பிறந்த தேதி: *1906 - 06 - 27*

குமாரசுவாமிக் குருக்கள் (குருசாமிக் குருக்கள்) முகாமையிற் கீரிமலையில் நிகழ்ந்த துவிபாஷா பாடசாலையிலும் சுன்னாகம் பிராசீன பாடசாலையிலும் வடமொழி தென்மொழிகளைக் கற்றுணர்ந்தவர். ஆகம சாஸ்திரங்களையும் கிரியைமுறைகளையும் பயிற்றி வைத்தவர் நகுலேஸ்வர ஆதீனகர்த்தராய் விளங்கிய குமாரசுவாமிக் குருக்களே என்பதை நன்றியோடு நினைவுகூரும் இயல்பினர்.

கவுணவத்தை வைரவர் கோவிலுக்குக் குருக்கள் ஒருவர் வேண்டும் என விரும்பிய பெரியோர் சிலராற் சிதம்பரம் அம்பலத்தாடி மடத்துக்கு அனுப்பப்பட்டு முத்துச்சாமி தேசிகர் என்பாரால் வீரசைவ குருவாக அபிடேகஞ் செய்யப்பட்டவர்.

மயிலிட்டி ஆறுமுகவையர் புதல்வி செல்வநாயகி அம்மையார் தமது வாழ்க்கைத் துணையாக வாய்க்கப் பெற்றவர்.

கவுணவத்தை வைரவர் கோவில், பொற்கலந்தம்பை வைரவர் கோவில், விளிசிட்டிச் சிவகுருநாத சுவாமி கோவில், மயிலங்கூடல் வைரவர் கோவில் என்பவற்றின் குருக்களாய் விளங்குவதோடு கீரிமலை மாரியம்மன் தேவஸ்தான ஆதீனகர்த்தராகவும் விளங்குபவர்.

குருவாக அபிடேகஞ் செய்யப்பட்டு ஐம்பதாண்டு நிறைவெய்தியமையை நினைவுகூருமுகமாகப் பொன் விழாவயர்கின்றவர்.

உ
கணபதி துணை

# முகவுரை

ஸ்ரீ வைரவக் கடவுளைக் குறித்த கவசங்கள் மூன்றும், கால வைர வாஷ்டகத் தோத்திரமும், அஷ்டோத்தர சத நாமாவளி அருச்சனை மந்திரமும் இப் புத்தகத்திற் சேர்க்கப்பெற்றுள்ளன ; யாழ்/கீரிமலையி லுள்ள உயர்திரு. ச. தற்பராநந்தக்குருக்கள் அவர்களால், தம் மிடத்துள்ள வைரவரின் பூசாவிதி உபாசனை முதலியவற்றை விவரிக் கும் பத்ததி போன்ற ஒரு நூலிலிருந்து திரட்டப்பட்டன.

அவை என் பார்வைக்குக் கிட்டின. சிற்சில எழுத்துப்பிழை, அச்சுப்பிழை போன்றவை அத் திரட்டிற் காணப்பட்டன. வேத வேதாங்காதி வடமொழிப் புலமைசான்ற உயர்திரு. கி. சீதாராம சாஸ்திரிகள் அவர்களின் உதவிகொண்டு பிழைதிருத்தியும், பொருள் விளக்கம் நவமாக எழுதிச் சேர்த்தும் உதவலாயினேன் ; வட மொழி பயிலாதவரும் அக்கவசாதிகளைப் படிக்கும்போது, அவற் றிலமைந்த வடமொழிச் சிறப்பெழுத்துக்களை வேறு பிரித்தறிந்து ஓரளவிற்கு உச்சரித்தற்கு உதவியான முறையில் அச்சிற் பதிப்பிக் கப்பெற்றது ; 'று' என்ற குற்றியலுகரத்தின் உச்சரிப்புப் போன்ற உச்சரிப்புள்ள ஏழாம் உயிரெழுத்து 'ரு' எனவும் 'கசடதப' என்னும் ஐவருக்கத்தின் 3ஆம் 4ஆம் எழுத்துக்கள் (எடுத் தும் கனைத்தும் உச்சரிக்கப்படுபவை), 'ஸ்ரீ' என்பது போன்றவற்றி லுள்ள சகரம் என்பவை தடித்த கறுப்பெழுத்துச் சாதியால் அமைய வும், ஜ - ஸ - ஹ - க்ஷ என்பவை அவ்வவ்வெழுத்தால் அமையவும் அச்சிடப்பட்டது.

பல்வேறு புராணத்து வைரவர் துதியான சில பாடல்களும் சேர்க்கப்பட்டுள. என் முதுமை, மறதி முதலியவற்றால் ஏதும் பிழை காணப்படின், அவற்றைக் கண்ணுறும் அறிஞர் அறி வித்தால், அவற்றை நன்றியறிவுடன் ஏற்று அடுத்த பதிப்பிற் சேர்க்க உதவியவராவர்.

465/1 காங்கேயன் வீதி,
சிவலிங்கப்புளியடி,
யாழ்ப்பாணம். 25-4-1975

வித்துவான் ந. சுப்பையபிள்ளை

உ

# வடுக பைரவ கவசாதியின் பயன்

விநாயகர் கவசம், கந்தசஷ்டி கவசம், சிவ கவசம், சக்தி கவசம், சுப்பிரமணிய கவசம் (வடமொழியில்), சண்முக கவசம் பாம்பன் சுவாமிகள் - குமரகுருதாசசுவாமிகள் இயற்றியது) எனப் பல கவசங்கள் உள.

உலகினர் தத்தம் அதி இஷ்டதெய்வம் எதுவோ, (அதாவது) முற்பிறவியில் உபாசித்த தெய்வமாய் அதன் தொடர்பாய் இப் பிறவியில் பக்தி மேலிட்டு ஏற்பட்ட இஷ்ட தெய்வம் எதுவோ-அதனைக் குறித்து மிகவும் உபாசனை செய்வர் - அதற்குரிய கவசத்தை - தோத்திராதிகளால் துதித்து வழிபாடுகளை மேற்கொள்கின்றனர்,

குலதெய்வமாகச் சிலவற்றைக் கொண்டாடியும், வளவிற் கோயில் கட்டி ஆதரித்தும், பூசையறையிலே - வீட்டில் உருவச் சின்னங்களை வைத்தும் வழிபடுகின்றனர்.

அந்த முறையிலே வைரவர் வழிபாடு நம் யாழ்ப்பாண நாட்டிலும், மற்றும் இலங்கையிற் பல பாகங்களிலும் நடைபெறுவதைக் காணலாம். சிற்சில விசேட நாட்களில் விரதமிருந்து பொங்கல் பூசைச் சிறப்பு விழாவும் கொண்டு வழிபடுகின்றனர்.

காணபதம், கௌமாரம் முதலிய அகச்சமயம் ஆறனுள்ளே பைரவம் என்பதும் ஒன்று; அது வயிரவக் கடவுளை வழிபட்டு அவரால் முத்தியின்பம் பெற அநுட்டிக்கப்படுவது என்பதும் குறிக்கொள்ளத்தக்கது.

பைரவரைக் குறித்து மங்கலவார (செவ்வாய்க்கிழமை) விரதம், சித்திரைமீ பரணி நட்சத்திர விரதம், ஐப்பசிமீ பரணி நட்சத்திர விரதம் என்பன விசேடபூசை வழிபாடுகளை அநுட்டித்தற்குரிய நாள்களாகும்.

இவ்விரத நாள்களிற் கைக்கொள்ளவேண்டியவைகளைக் குறித்து நாவலர் 2ஆம் சைவ வினாவிடையிலே விரத இயலிற் காணலாம்.

பைரவருக்குப் புராணாதிகளில் வரும் தமிழ்த் தோத்திரங்களும் உண்டு. ஆயினும், மந்திர ரூபமான தோத்திரங்கள் இந்தக் கவசங்களே. அவ் விரத காலங்களிலும் இவை பாராயணஞ் செய்தற்கு ஏற்றவை. மூன்று கவசங்கள் இப் புத்தகத்தில் உள.

காசிக் கால பைரவ அஷ்டகம் என்ற வடமொழித் தோத்திரமும் இக் கவசங்களின் பின்னே சேர்க்கப்பெற்றுளது.

பைரவர்க்கு 108 நாமார்ச்சனைக்குரிய மந்திரங்களும் இறுதியிற் சேர்க்கப்பட்டுளன. பூசகர்க்குப் பெரும்பாலும் எல்லா ஊர்களிலும் மிகவும் பயன்படுத்தவும், அடியார்கள் சொல்லிச் செய்விக்கவும் உதவியானவை அவை.

மந்த்ரம் :- ‘ நினைப்பவனை - தியானித்து உச்சரிப்பவனைக் காப்பது ’ என்ற காரணம்பற்றி வழங்கும் பெயராகும். இக் கவசாதிகள் சைவ உபாகமங்களிலிருந்து எடுத்து வெளியிடப்பட்டவை என்று அறியப்படுகின்றன. சிருஷ்டிகளின் பரம்பரையில் உபதேச முறையில் வெளிவந்துலவுவன.

# வைரவக்கடவுள் துதி

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொளிந்த வானவர்
குருதியும் அகந்தையுங் கொண்டு தண்டம்முன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

வெஞ்சினப் பரியழன் மீது போர்த்திடும்
அஞ்சனப் புகையென ஆல மாமெனச்
செஞ்சுடர்ப் படிவமேற் செறித்த மாமணிக்
கஞ்சுகக் கடவுள்பொற் கழல்க ளேத்துவாம்.

— கந்தபுராணம்

கருதரிய லளிதைபர னெற்றியிற்றோன் றிச்சூல கபால மேந்தி
வருபிரள யஞ்சுவற்றிப் பயிரவனு யண்டதத்து வங்கள் மாற்றி
அரிசரும கஞ்சுகியாய் வேதவெகி னூர்ந்துமுன்போ லவையுண்
டாக்கி
இருமைபெறக் காத்தருளுங் கேத்திரபா லன்றிருத்தா ளேத்தல்
செய்வாம்.

— கடம்பவனபுராரணம்

விதிப்பால வினைதவிர்க்கும் வியாக்கிரமா புரத்தினிது மேவி
னோர்கள்
†மதிப்பாலிற் செய்வினைக்கு மூவிலைவேற் சூலத்தின் மருவ வைத்தே
உதிப்பாலன் னையர்முலைகண் மீட்டருந்தா வகைமுத்தி யுதவுந்
தில்லைப்
பதிப்பால வயிரவன்றன் பாதசரோ ருகங்களென்றும் பரவி
வாழ்வாம்.

— ‡புலியூர்ப்புராணம்

தளம்பொலி மலரோ னாதி வானவர் தாழ்ந்து போற்ற
உளம்பொலி காசி மேவு முயிர்கள்செய் பாவ மெல்லாங்
களம்பொலி யாது தண்டங் கண்டற வொழித்து முத்தி
வளம்பொலி வகைசெய் கால வயிரவற் கன்பு செய்வாம்.

துங்க மாமணித் தூணில்வந் திரணியன் றோள்வலி தனைவாங்குஞ்
சிங்க ஏற்றுரி யரைக்கசைத் துலகெலாந் தோர்ந்தளந் தவள்மேனி
யங்கம் யாவுமோர் கதையதாக் கொண்டத ளங்கியாப் புனை
காழிச்
சங்க வார்குழைச் ‡சட்டைநா யகன்றுணைத் தாமரைச் சரண்
போற்றி.

— சீகாழிப்புராணம்

---

† மதிப்பாலில் = புத்திபூர்வமாக. ‡ புலியூர் = சிதம்பரஸ்தலம்.

‡ சட்டைநாயகன் = சீகாழிப்பதிச் சிவாலயத்திலே திருத்தோணிமேல் வீற்றிருக்கும் 'தோணியப்பர்', சட்டைநாதர்' எனப் பெயரிய வைரவக்கடவுள்.

# 1. ஸ்ரீ வடுக பைரவ கவசம்

உக்தஞ் ச பைரவ தந்த்ரே || மகாதேவ உவாச ||

ப்ரீயதாம் பைரவோ தேவோ நமோ வை பைரவாய ச |
தேவேசி ! தேகரக்ஷார்த்தம் காரணம் கத்யதாம் த்ருவம் || (1)

ம்ரியந்தே ஸாதகா யேந விநா ச்மசாநபூமிஷு |
ரணேஷு சாதிகோரேஷு மகா ம்ருத்யு பயேஷு ச || (2)

ச்ருங்கி ஸலில வஜ்ரேஷு ஜ்வராதி வ்யாதி வஹ்நிஷு |

தேவி உவாச ||

கதயாமி ச்ருணு ப்ராஜ்ஞ வடுகம் கவசம் சுபம் || (3)

கோபநீயம் ப்ரயத்நேந மாத்ருகா ஜாரஜோ யதா |
ஓம் அஸ்ய ஸ்ரீ வடுக பைரவ கவசஸ்ய ஆநந்த
பைரவ ருஷி: | த்ரிஷ்டுப் சந்த: | ஸ்ரீவடுக பைரவோ
தேவதா | வம் பீஜம் | ஹ்ரீம் சக்தி: | ஓம் வடுகாய
இதி கீலகம் | மம அபீஷ்ட சித்யர்த்தே ஜபே விநியோக: ||

---

இது பைரவ தந்திரத்திலே சொல்லப்பட்டது. மகாதேவர் சொல்லியருளினர்:

"பைரவர் மகிழுக; பைரவருக்கு நமஸ்காரம். ஈஸ்வரியே, எவரும் தமது தேகத்தைப் பாதுகாப்பதற்குரிய சாதனத்தைச் சொல்வாயாக; மற்றைத் தெய்வங்களை வழிபடுகிறவர்கள் எந்தச் சாதனம் இல்லாமையால், மயானப்பிரதேசங்களிலும், யுத்தங்களிலும், மிகக் கொடிய அகால மரணபயங்களிலும், கொம்புள்ள மிருகங்கள் தண்ணீர் இடியேறு காய்ச்சல் (சுரம்) முதலிய நோய்கள் நெருப்பு ஆகிய இவைகளிலும் மரணமடைகிறார்களோ, அவ்வாபத்துக்களின் நிவிருத்தி சம்பந்தமான உறுதியான சாதனத்தை (கருவியை)க் கூறுவாயாக."

தேவி கூறினள்:

அப்படிப்பட்ட நன்மைதருஞ் சாதனமாகிய ஸ்ரீ வடுக பைரவ கவசத்தைச் சொல்லுகிறேன் கேட்பீராக. இது தகுதியற்ற பிறர் எவருக்குஞ் சொல்லாமல் இரகசியமாக வைத்துப் போற்றப்படும் கவச மந்திரமாகும்.

இந்த ஸ்ரீ வடுக பைரவ கவசத்துக்கு ஆனந்த பைரவர் இருஷி; 'த்ரிஷ்டுப்' சந்தஸ் (சுலோக ரூபம்); ஸ்ரீ வடுக பைரவர் [தியானத்துக்குரிய] தெய்வம்; 'வம்' பீஜம்; 'ஹ்ரீம்' சக்தி; 'ஓம் வடுகாய' கீலகம்; 'என் இஷ்டசித்தியின் பொருட்டு' என்று பாராயண செபத்தில் மன ஒருமைப்பாடு கொள்ளத் தக்கது.

ஓம் சகஸ்ராரே மஹாசக்ரே கர்ப்பூரதவளே குருঃ || (4)

பாது மாம் வடுகோ தேவோ் பைரவঃ ஸர்வகர்மஸு |
பூர்வஸ்யாம் அஸிதாங்கோ மாம் திஸி ரக்ஷது ஸர்வதா || (5)

ஆக்நேய்யாஞ்ச ருருঃ பாது தக்ஷிணே சண்டபைரவঃ |
நைர்ருத்யாம் க்ரோதநঃ பாது உந்மத்தঃ பாது பச்சிமே || (6)

வாயவ்யாம் மாம் கபாலீ ச நித்யம் பாயாத் ஸுரேச்வரঃ |
பீஷணோ பைரவঃ பாது உத்தரஸ்யாந் து ஸர்வதா || (7)

ஸம்ஹார பைரவঃ பாயாத் ஈசாந்யாஞ் ச மஹேச்வரঃ |
ஊர்த்வம் பாது விதாதா ச பாதாளே நந்தகோ விபுঃ || (8)

ஸத்யோஜாதஸ் து மாம் பர்யாத் ஸர்வதோ தேவஸேவிதঃ |
வாமதேவோ வநாந்தே ச வநேऽ கோரஸ் ததாऽவது || (9)

---

கர்ப்பூரம்போல் வெண்ணிறமாக விளங்கு 'சகஸ்ராரம்' எனப் பெயரிய சக்கரத்தில் [இது எங்கள் தலையுச்சியில் மண்டை ஓட்டினுள் இருக்கும் ஓர் ஆதார சக்கரம்] வீற்றிருக்குந் தலைவராகிய வடுக பைரவக் கடவுள் எனது எல்லாத் தொழில்களிலும் என்னைக் காக்க; கரிய மேனியையுடையவர் கீழ்த்திசையில் எப்பொழுதும் என்னைக் காக்க. (4, 5)

தென்கிழக்கிலே ருருபைரவர் காக்க; தெற்கில் சண்ட பைரவர் காக்க. தென்மேற்கில் குரோதபைரவர் காக்க; மேற்கில் உன்மத்த பைரவர் காக்க. (6)

வடமேற்கில் தேவேசுவரராகிய கபாலபைரவர் நித்தியம் என்னைக் காக்க; வடக்கில் பீஷணபைரவர் எப்பொழுதும் காக்க. (7)

வடகிழக்கிலே மகேசுவராகிய சங்காரபைரவர் காக்க; தலைக்கு மேலுள்ள பக்கமாகிய ஆகாயத் திசையிலே 'விதாதா' காக்க; தரைக்குக் கீழதாகிய பாதாளத் திசையிலே சந்தோஷகரராகிய 'விபு' (வியாபகர்) காக்க. (8)

தேவர்களால் சேவிக்கப்பட்டவராகிய சத்யோஜாதமூர்த்தி எல்லாத் திசைகளிலும் என்னைக் காக்க; வாமதேவமூர்த்தி வனத்தின் எல்லையிலே என்னைக் காக்க; அகோரமூர்த்தி வனத்திலே என்னைக் காக்க; (9)

ஜலே தத்புருஷ: பாது ஸ்தலே ஈசாந ஏவ ச |
டாகிநீ புத்ரக: பாது புத்ராந் மே ஸர்வத: ப்ரபு: || (10)

ஹாகிநீ புத்ரக: பாது தாராம்ஸ் து லாகிநீ ஸுத: |
பாது சாகிநிகா புத்ர: ஸைந்யம் வை காலபைரவ: || (11)

மாலிநீ புத்ரக: பாது பசூநச்வாந் கஜாம்ஸ் ததா |
மகாகாலோ ऽ வது க்ஷேத்ரம் ச்ரியம் மே ஸர்வதோ கிரா || (12)

வாத்யம் வாத்யப்ரிய: பாது பைரவோ நித்யஸம்பதா |
ஏதத் கவசம் ஈசாந தவ ஸ்நேஹாத் ப்ரகாசிதம் || (13)

மகாதேவருக்குத் தேவியினுல் இரகசியமாகச் சொல்லப்பட்ட
ஸ்ரீ வடுக பைரவ கவசம் முற்றிற்று.

---

தத்புருஷமூர்த்தி நீரிலே காக்க; ஈசானர் தரையிலே காக்க; பிரபுவாகிய டாகினீபுத்திரர் என் புதல்வர்களை எத்திசையிலும் காக்க. (10)

ஹாகினீபுத்திரர் வாகினீபுத்திரர் எனம் பெயரியவர் என் மனைவியைக். காக்க; சாகினீபுத்திரராகிய காலபைரவர் என் சேனையைக் காக்க. (11)

மாலினீபுத்திரர் என்னுடைய பசு குதிரை யானையாகிய இவற்றைக் காக்க; மகாகாளர் என் காணி பூமிகள் செல்வம் இவைகளைத் தம் ஆஞ்ஞாவசனத்தால் எங்கும் பாதுகாக்க (12);

வாத்தியப்பிரியராகிய பைரவர் என் குரலொலியை நித்தியம் என் போகவாழ்க்கையுடனும் பாதுகாக்க. ஈசானரே, இந்தக் கவசத்தினை உன்மீதுள்ள அன்பினுல் வெளிப்படக் [ கூறினேன் என்று ஈசுவரியால் ஈசுவரருக்குக் ] கூறப்பட்டது (13).

# 2. ஸ்ரீ வடுக பைரவ பீரம்ம கவசம்

உத்தஞ் ச ருத்ரயாமளே || ஸ்ரீதேவ்யுவாச ||

பகவந் ஸர்வவேத்தா த்வம் தேவாநாம் ப்ரீதி தாயகம் |
பைரவம் கவசம் ப்ரூஹி யதி சாஸ்தி க்ருபா மயி || (1)

இத்தம் தேவ்யா வச: ச்ருத்வா ப்ரஹஸ்யாதி ஸ்வயம் ப்ரபு: |
உவாச வசநம் தத்ர தேவதேவோ மஹேச்வர: || (2)

ஈச்வர: உவாச ||

வடுக கவசம் திவ்யம் ச்ருணு மத்ப்ராணவல்லபே |
சண்டிகா தந்த்ர ஸர்வஸ்வம் வடுகஸ்ய விசேஷத: || (3)

தத்ர மந்த்ராத்யக்ஷரந் து வர்ஸுதேவ ஸ்வரூபகம் |
சங்க வர்ணத்வயோ ப்ரஹ்மா வடுகம் சந்த்ரசேகர: || (4)

---

இது ருத்ரயாமளத்திற் கூறப்பட்டது. தேவி [ஈசுவரனை நோக்கி] சொல்லியருளினள் :

பகவானே ! நீர் சகல மந்திர சாஸ்திரங்களையும் அறிந்தவர் ; தேவர்களுக்கு உவப்பைக்கொடுப்பதாகிய ஸ்ரீ வடுக பைரவ பிரம்ம கவசத்தை என்மீது கருணைகூர்ந்து சொல்லியருள்வீராக (1);

நீர் சொல்லாதொழியின் [உண்ணுவிரதமிருந்து] உயிர் துறப்பேன் ; இது உண்மை, முக்காலும் உண்மை ; சந்தேகங் கொள்ளவேண்டாம் (2) ;

இவ்வாறு கூறிய தேவியின் வார்த்தையைக் கேட்டு, பிரபுவும் கடவுளர்க்கெல்லாம் முதன்மைக் கடவுளுமாகிய மகேசுவரர் சொல்லியருளினர் (3) ;

ஈசுவரர் கூறினர் [பின்வருமாறு] :

பிராணநாயகீ ! [சொல்லுகிறேன்] கேள் ; :வடுகப் பிரம்ம கவசமானது, ஸ்ரீ வடுக பைரவருக்கு விசேஷத்தன்மை பொருந்தியதாய், சண்டிகா தந்திரத்தின் உயிர்நாடி போன்றது ; மகிமையுடையது (4) ;

ஆபதுத்தாரணோ தேவோ பைரவோ பரிகீர்த்திதஃ |
ப்ரவக்ஷ்யாமி ஸமாஸேந சதுர்வர்க்க ப்ரஸித்தயே || (5)

ப்ரணவம் காமதம் வித்யால் ல்ஜ்ஜாபீஜஞ் ச ஸித்திதம் |
வடுகாயேதி விஜ்ஞேயம் மகாபாதகநாசனம் || (6)

ஆபதுத்தாரணாயேதி த்வாபதுத்தாரணம் ந்ருணாம் |
குருத்வயம் மகேசாநி மோகநே பரிகீர்த்திதம் || (7)

வடுகாய மகேசாநி ஸ்தம்பநே பரிகீர்த்திதம் |
லஜ்ஜாபீஜம் ததா வித்யாந் முக்திதம் பரிகீர்த்திதம் || (8)

---

அந்தச் சண்டிகா தந்திரத்திலே, அக் கவசத்தினுள்ளே பொருந்தியுள்ள மந்திரத்தின் முதலாவதான எழுத்து [ஓம்] விஷ்ணுவின் சொரூபமாயுள்ளது; இரண்டாவதெழுத்து [ஹ்ரீம்] பிரமாவின் சொரூபம்; 'வடுகாய' என்பது சந்திரசேகரரின் சொரூபம் (4);

'ஆபதுத்தாரணாய' என்பது பைரவக் கடவுளின் சொரூபத் தோடு கூடியதாகச் சொல்லப்பட்டது; சதுர்வர்க்கத்தின் விசேட சித்திக்கு உரியமுறையைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன் [கேள்] (5)

பிரணவம் காமத்தை (இன்பத்தை)க் கொடுப்பதாக அறிக. 'ஹ்ரீம்' என்ற மந்திரம் கார்யசித்தியை (பொருட்பேற்றினை)த் தருவது. 'வடுகாய' என்ற மந்திரம் மகாபாவங்களை ஒழிப்பது என்று அறியத்தக்கது (எனவே, அறத்தைத் தருவது என்பதும் அதன் பொருளாம்) (6);

'ஆபதுத்தாரணாய' என்ற மந்திரம் மனிதர்களுக்கு ஆபத்துக்களினின்றும் கைதூக்கிக் கரையேற்றிவிடுவது; (பிறவித் துன்பத்தின் நீக்கி மோட்சத்தைக் கொடுப்பது) 'குருகுரு' என்பது மகேசுவரியே! மோகனவிஷயத்திலே அமைவதாக விசேடமாகச் சொல்லப்பட்டது (7);

மகேசுவரீ! 'வடுகாய' என்ற மந்திரம் ஸ்தம்பன விஷயத்திலே அமைவதாக மிகச் சொல்லப்பட்டது. 'ஹ்ரீம்' என்பது முக்தியை (விடுதலையை - விடுதலை செய்வதனை)த் தருவதாகச் சொல்லப்பட்டது. (8);

---

4ஆம் பக்கத்தில் 2ஆம் இலக்கமிடப்பட்ட உரைப்பகுதியை நீக்கி 3ஆம் 4ஆம் இலக்கமிடப்பட்ட உரைப்பகுதிகளை 2ஆம் 3ஆம் ஸ்லோகங்களுக்கான உரைப் பகுதிகளாகக் கொள்க.

த்வாவிம்சத் யக்ஷரோ மந்த்ர: க்ரமேண ஜகதீச்வரி |

ஓம் அஸ்ய ஸ்ரீ வடுக பைரவ ப்ரஹ்ம கவசஸ்ய பைரவ ருஷி: |
அநுஷ்டுப் சந்த: | ஸ்ரீவடுக பைரவோ தேவதா | மம வடுகபைரவ
ப்ரஸாத ஸித்யர்த்தே ஜபே விநியோக: ||

ஓம் பாது சிரஸி நித்யம் பாது ஹ்ரீம் கண்டதேசகே || (9)

வடுகாய பாது நாபௌ சாபதுத்தாரணய ச |
குருத்வயம் லிங்கமூலே த்வாதாரே வடுகாய ச || (10)

ஸர்வதா பாது ஹ்ரீம் பீஜம் பாஹ்வோர் யுகளமேவ ச |
ஷடங்க ஸஹிதோ தேவோ நித்யம் ரக்ஷது பைரவ: || (1 )

ஓம் ஹ்ரீம் வடுகாய ஸததம் ஸர்வாங்கம் மம ஸர்வதா |
ஓம் ஹ்ரீம் பாதௌ மகாகால: பாது வீராஸநோ ஹ்ருதி || (12)

---

இருபத்திரண்டெழுத்து வடிவான மந்திரம் இம்முறையானது (இவ்வித மகிமை பொருந்தியது என்று) உலகநாயகியே! அறிவாயாக.

இந்த ஸ்ரீ வடுக பைரவ பிரம்ம கவசத்துக்கு பைரவ ருஷி; அநுஷ்டுப் சந்தஸ்; ஸ்ரீ வடுக வைரவக் கடவுள் தெய்வம் (தியானத்துக்குரிய தேவதை); வடுக பைரவருடைய அநுக்கிரகப் பேறு எனக்கு உண்டாகும் பொருட்டு [என்று] பாராயண ஜெபத்தில் மன ஒருமைப்பாடு.

'ஓம்' என்ற மந்திரம் என் சிரத்தில் நித்தியம் காக்க;

'ஹ்ரீம்' என்ற மந்திரம் என் கழுத்திடத்திலே காக்க; (9)

'வடுகாய' 'ஆபதுத்தாரணய' என்பன கொப்பூழ்ப் பகுதியில் காக்க;

'குரு குரு' என்ற மந்திரம் லிங்கத்தின் அடியில் (குய்யத்தில்) காக்க

'வடுகாய' என்ற மந்திரம் மூலாதாரத்தில் (குதத்தில்) காக்க; (10)

'ஹ்ரீம்' என்னும் பீஜமந்திரம் என் இரு தோள்களையும் சதாகாலமும் காக்க;

ஆறு அங்கங்களோடு கூடிய பைரவக்கடவுள் [எல்லா அங்கங்களையும்] நித்தியம் காக்க (11);

'ஓம் ஹ்ரீம் வடுகாய' என்னும் மந்திரம் என் சர்வ அங்கங்களையும் இடையறாமல் எப்பொழுதும் காக்க;

'ஓம் ஹ்ரீம்' மகாகாலர் என் புறவடிகளைக் காக்க; வீராசனர் இதயத்தில் காக்க (12);

ஓம் ஹ்ரீம் காலஃ சிரஃ பாது கண்டதேசே து பைரவஃ |
கணராட் பாது ஜிஹ்வாயாம் அஷ்டபிஃ சக்திபிஃ ஸஹ || (13)

ஓம் ஹ்ரீம் தண்டபாணிர் குஹ்யமூலே பைரவீ ஸகிதஸ் ததா |
ஓம் ஹ்ரீம் விச்வநாதஃ ஸதா பாது ஸர்வாங்கம் மம ஸர்வதா || (14)

ஓம் ஹ்ரீம் அந்நபூர்ணா ஸதா பாது சாம்ஸௌ ரக்ஷது சண்டிகா |
அஸிதாங்கஃ சிரஃ பாது லலாடம் ருரு பைரவஃ || (15)

சண்டபைரவஃ பாது வக்த்ரம் கண்டம் ஸ்ரீக்ரோத பைரவஃ |
உந்மத்த பைரவஃ பாது ஹ்ருதயம் மம ஸர்வதா || (16)

நாபிதேசே கபாலீ ச லிங்கே பீஷண பைரவஃ |
ஸம்ஹார பைரவஃ பாது மூலாதாரஞ் ச ஸர்வதா || (17)

---

'ஓம் ஹ்ரீம்' காலர் என் சிரத்தைக் காக்க; பைரவர் கழுத்திடத்தே காக்க;

'ஓம் ஹ்ரீம்' கணராஜர் எண் சக்திகளோடு கூட என் நாவில் காக்க; (13)

'ஓம் ஹ்ரீம்' தண்டபாணி பைரவி சகிதராய் குய்யத்தின் அடியிலே காக்க;

'ஓம் ஹ்ரீம்' விசுவநாதர் என் சர்வாங்கத்தையும் இடையரு மல் எப்பொழுதும் காக்க. (14)

'ஓம் ஹ்ரீம்' அன்னபூர்ணு சதாகாலமும் காக்க; தோள் களின் மேலிடங்களை 'ஓம் ஹ்ரீம்' சண்டிகா காக்க;

'ஓம் ஹ்ரீம்' கரியமேனியர் சிரத்தினைக் காக்க; 'ஓம் ஹ்ரீம்' ருரு பைரவர் நெற்றியைக் காக்க (15);

'ஓம் ஹ்ரீம்' சண்ட பைரவர் முகத்தைக் காக்க; 'ஓம் ஹ்ரீம்' குரோத பைரவர் கழுத்தைக் காக்க; ஓம் ஹ்ரீம் உந்மத்த பைரவர் என் இருதயத்தைச் சதாகாலமும் பாதுகாக்க (16);

'ஓம் ஹ்ரீம்' கபால பைரவர் கொப்பூழ்ப் பகுதியிற் காக்க; 'ஓம் ஹ்ரீம்' பீஷண பைரவர் லிங்கத்தில் காக்க; 'ஓம் ஹ்ரீம்' சங்கார பைரவர் மூலாதாரத்தை எப்பொழுதும் காக்க (17);

பாஹுயுக்மம் ஸதா பாது பைரவோ மம கேவலம் |
ஹம்ஸபீஜம் ஹ்ருதி பாது ஸோஹம் ரக்ஷது பாதயோ: || (18)

ப்ராணாபானௌ ஸமானஞ்ச உதானம் வ்யானமேவ ச |
ரக்ஷந்து பாதமூலே ச தசதிக்ஷு ஸமந்தத: || (19)

ப்ரணவ: பாது ஸர்வாங்கம் லஜ்ஜாபீஜம் மஹாபயே |
இதி ஸ்ரீப்ரஹ்ம கவசம் பைரவஸ்ய ப்ரகீர்த்திதம் || (20)

மகேசுவரரால் தேவிக்குச் சொல்லப்பட்ட
ஸ்ரீ வடுக பைரவ பிரஹ்ம கவசம் முற்றிற்று.

---

'ஓம் ஹ்ரீம்' பைரவர் என் இரு தோள் முழுவதிலும் சதா காக்க; ஹம்ஸ பீஜ மந்திரம் இருதயத்தில் காக்க; 'ஸோஹம்' மந்திரம் பாதங்களில் காக்க (18);

பிராணன் அபானன் சமானம் உதானம் வியானம் என்ற பைரவரின் பஞ்ச வாயுக்களும் பத்துத் திசைகளிலும் சூழ்வர உள்ளங்கால்களில் காக்க (19);

பிரணவ மந்திரம் என் எல்லா அங்கங்களையும் காக்க; 'ஹ்ரீம்' பீஜ மந்திரம் பெரும் பயமுண்டாகும்பொழுது காக்க (20).

# 3. ஸ்ரீ வடுக பைரவ கவசம்

**முகவுரை :**

தேவி உவாச ||

**தேவதேவ ஜகந்நாத த்ரிநாத ஸ்ரீத்ரிலோசந |**
**பவத் ப்ரஸாதாத் பகவந் பைரவஸ்ய மஹாத்மநः ||** *(1)*

**கவசம் ச்ரோதும் இச்சாமி த்வத் ஸ்நேஹாதிசயாதஹம் |**

சிவ உவாச ||

*ப்ராணிநாம் ர்க்ஷஹார்த்தஞ் ச ப்ரவீமி ஸுமுகே குணாந் || (2)*

**இருஷி சந்தஸ் முதலிய விபரம் :**

**வர்மணோ பைரவஸ்யாஸ்ய சிவ ப்ரஹ்மா ருஷிஸ் ஸ்ம்ருதः !**
**சந்தோऽ நுஷ்டுப் ததா தேவோ பைரவோ வடுகாத்மஜः ||** *(3)*

---

தேவி கூறுவாளாயினுள் :

**தேவாதி தேவரே! சர்வலோக நாயகரே! மும்மூர்த்திகளுக்குந் தலைவரே! முக்கண்ணரே! பகவானே! பரமானந்த சொரூபமாயுள்ள [ஸ்ரீ வடுக] பைரவரின் (1) கவசத்தினை, உம்மீது கொண்டுள்ள மிகுந்த அன்பினை முன்னிட்டு, உமது கருணையினுல் யான் கேட்டறிதற்கு விரும்புகின்றேன்.**

சிவபிரான் சொல்லியருளினுர் :

**இன்முகமும் இன்சொல்லும் உடைய தேவியே! பிராணபெலனேடு கூடி வாழுஞ் சனங்களுக்கு [தர்மசாதனமாகிய தேகத்தின்] பாதுகாப்பின் பொருட்டாக [ஸ்ரீ வடுக பைரவ கவசத்தின் சொரூபாதிய] இயல்புகளைச் சொல்லுகிறேன்; [கேட்பாயாக] (2)**

**இந்த ஸ்ரீ வடுக பைரவ கவசத்துக்குச் சிவப்பிரம்மா இருஷி; சந்தஸ் (சுலோகம்) அநுஷ்டுப்; ஸ்ரீ வடுக பைரவர் தேவதை (தியானத்துக்குரிய தெய்வம்) (3);**

ஐச்வர்யாபிவ்ருத்த்யர்த்தம் இஷ்டார்த்தஞ் ச நியுஜ்யதே | (4)

ஸ்ரீ வடுக பைரவத் தியான சுலோகம் - (5, 6):

சூல கட்க டமரூ லஸத்கரம் ஸவ்ய ஹஸ்தமயங்கரோஜ்வலம் |
ஸ்ந்ததம் ஹ்ருதி பஜாமி பைரவம் ச்வாதிருடம்
அஹமிஷ்டசித்தயே || (5)

திக்வாஸஸம் கமலபத்ர விசால நேத்ரம்
பஸ்மாங்கராகமபயம் ப்ரபு மாதிதேவம் |
த்யாயாமி தம் வடுகநாதம் அஹர்நிசம் மே
ஸர்வார்த்த ஸித்திம் அதுலாம் க்ருபயா திசந்தம் || (6)

தியான முடிவுரை:

ஏவம் த்யாத்வா து தேவேசம் வடுகாக்யம் மஹாபலம் |
உச்சரேத் கவசம் பச்சாத் தேவதாபீஷ்ட ஸித்திதம் || (7)

---

ஐசுவரிய அபிவிருத்தியின்பொருட்டும் இஷ்ட காரிய சித்தியின் பொருட்டுமாகச் செபித்தலின் இலட்சியம் அமையும் (சங்கற்ப மேற்கோள் - 'ஜபே விநியோகஃ' என்றவாறு) (4)

சூலம் வாள் டமருகம் இவை விளங்குங் கரங்களையுடையவரும், அபயகரமாக விளங்கும் வலக்கையினையுடையவரும், நாய் வாகனத்தவருமாகிய [ஸ்ரீ வடுக! பைரவக் கடவுளை யான் விரும்பிய பலன் சித்திக்கும்பொருட்டாக எப்பொழுதும் என் இதயத்திற் போற்றுகின்றேன் (5);

நிர்வாண கோலத்தினரும் செந்தாமரை மலரின் இதழ் போன்ற விசாலமான கண்களையுடையவரும் விபூதியினைப் பூசிய மெய்ப்பூச்சினையுடையவரும், [எவரும்] சரணம் புகுதற்கேற்புடையவரும், எல்லாம்வல்ல தலைவரும், முதன்மைத் தெய்வமும், எனக்கு ஒப்பற்ற சகல பொருட்பேறுகளையுங் கருணையினால் தருபவருமாகிய ஸ்ரீ வடுக பைரவரை இரவும் பகலும் தியானிக்கின்றேன் (6);

இவ்விதமாக, தேவர்க்கெல்லாம் தலைவரும், சர்வ சக்தி உடையவருமாகிய ஸ்ரீ வடுக பைரவரைத் தியானித்து, அதன் பின்னர், தேவர்களுக்கும் இஷ்டசித்தியைக் கொடுப்பதாகிய கவசத்தினைப் பாராயணஞ் செய்க (உச்சரிக்க) (7);

ரக்ஷா ஸ்துதி தொடக்கம்:

சிரோ மே பைரவ: பாது பாலம் புரநிஷூதந: |
த்ருசௌ பாது த்ரிநேத்ரோ மே ச்ரவணம் நீலகண்டக: || (8)

திக் வாஸா மே பாது கண்டம் நாஸிகாம் அககந்யபாக் |
ஓஷ்டௌ த்ரிபுரகாதீ மே ஜிஹ்வாம் பாது கபாலத்ருக் || (9)

தந்தாந் பாது க்ரதுத்வம்ஸீ சிபுகம் பூதவாஸக: |
கபாலீ பாது மே க்ரீவாம் ஸ்கந்தௌ பாது கஜாந்தக: || (10)

புஜௌ மே பாது கௌமாரோ ஹ்ருதயம் க்ஷேத்ரபாலக: |
அபீருர் மே ஸ்தநௌ பாது வக்ஷ: பாது மஹேச்வர: || (11)

குக்ஷிம் மே பாது ஸம்ஹர்த்தா நாபிம் மே ஷண்முகப்ரிய: |
பூதநாத: கடிம் பாது குஹ்யம் பாது ஜடாதர: || (12)

ஊரு பாது வ்ருஷாரூடோ ஜாநுநீ பூத பாவந: |
ச்மசாநவாஸீ மே பாது பாது ஸர்வாங்கம் ஈச்வர: || (13)

---

என் சிரத்தினைப் பைரவர் காக்க; நெற்றியைத் திரிபுரங்களை அழித்தவர் காக்க; இரு கண்களையும் முக்கண் மூர்த்தி காக்க; என் காதினை நீலகண்டர் காக்க; (8) திகம்பரர் என் கழுத்தினைக் காக்க; என் மூக்கினை மலைமகள் (பார்வதி) மைந்தர் காக்க; உதடுகளை முப்புரங்களை எரித்தவர் காக்க; என் நாவினைப் [பிரம] கபாலமேந்தியவர் காக்க (9);

பற்களை தக்கனது யாக சங்காரமூர்த்தி காக்க; மோவாயினை உயிர்க்குயிராய் வசிப்பவர் காக்க! [பிரம] கபால மாலையணிந்தவர் என் கழுத்தினைக் காக்க; என் தோள்களின் மேலிடத்தைக் கஜாசுர சங்காரமூர்த்தி (10);

என் இரு தோள்களையுங் காக்க குமாரப் பருவ சொரூபி; க்ஷேத்திரபாலகர் என் இதயத்தைக் காக்க; பயமில்லாதவர் என் முலைமார்பினைக் காக்க; மகேசுவரர் மார்பிடத்தைக் காக்க (11);

வயிற்றினைக் காக்க சங்கார மூர்த்தி; கொப்பூழினை ஷண்முகருக்கு விருப்பினர் காக்க; பூத கணத் தலைவர் இடுப்பினைக் காக்க; என் குய்யத்தினை ஜடையுடையவர் காக்க (12);

தொடைகளை இடபவாகனர் காக்க; முழங்காலைப் [பஞ்ச] பூத வடிவாக நினைக்கப்படத்தக்கவர் காக்க; மயானத்திலே வசிப்பவராகிய ஈசுவரர் என் எல்லா அங்கங்களையும் காக்க காக்க (= ரக்ஷ ரக்ஷ) (13).

**கவசபாராயண பலன் :**

*ய இதம் கவசம் தேவி! படேத் ப்ரயத மானஸ: |*
*தஸ்யைச்வர்யாபிவ்ருத்த் யர்த்தம் இஷ்டாந்நஞ் ச ததாம்*
*யஹம் || (14)*

*ரோகார்த்தோ முச்யதே ரோகாத் புத்ரார்த்தீ லபதே ஸுதாந் |*
*ஜபித்வா ச்ரத்தயா கந்யா ஆயுஷ்மந்தம் பதிம் லபேத் || (15)*

*வித்யா விநய ஸம்பந்நம் ஸுகுலீனம் ஸுரூபிணம் | ]*
*ஜபித்வா விதவா நாரீ வைதவ்யம் நாப்நுயாத் க்வசித் || (16)*

*ஜபித்வா கவசம் ப்ராதர் முச்யதே நாத்ர ஸம்சய: |*
*நாஸ்தி தஸ்யாப ம்ருத்யுச்சாகால ம்ருத்யு: கதாசந || (17)*

*இஹலோகே ஸுகம் புக்த்வா புத்ர பௌத்ரை: ஸுபாந்தவை: |*
*அந்தே கைலாஸம் ஆவிச்ய மம பாததலம் வ்ரஜேத் || (18)*

---

தேவீ! எவனொருவன் இக்கவசத்தினை மனவூக்கமுடையனாய்ப் படிப்பானோ (பாராயணஞ் செய்வானோ), அவனுக்கு நான் ஐசுவரிய அபிவிருத்தி மற்றும் புருஷார்த்தங்கள் விரும்பிய உணவு வகை இவைகளைக் கொடுப்பேனாகிறேன் (14);

நோயினாற் பீடிக்கப்பட்டவன் அந்நோயினின்றும் விடுதலை பெறுகிறான்; புத்திரப் பேற்றை விரும்பியவன் புத்திரரைப் பெறுகிறான்; கன்னிகையானவள் [இக் கவசமாகிய மந்திரத்தினை] பக்தி விசுவாசத்துடன் செபித்து [அதனால்] நீண்ட ஆயுளுடையவனும் (15,) கல்வியறிவொழுக்கம் நிறைந்தவனும் உயர்குடிப் பிறப்பு ஒழுக்கங்களுடையவனும், நல்ல அழகனுமாய கணவனை அடைபவளாவள்; கைம்பெண்ணாயுள்ளவள் இதனைப் பாராயணஞ் செய்துவந்தால் [பின்னர்] எங்கணும் (எப் பிறவியிலும்) கைம்பெண்ணாந்தன்மையை அடையமாட்டாள் (16);

பிராதக்காலத்திலே (விடியற்காலையிலே) இக் கவசத்தினை [ஒருவன்] [நியமமாகப்] பாராயணஞ் செய்துவந்தால், [உலக ஆசாபாச பந்தம் சிறைச்சாலைப் பந்தம் கடன் கொடுக்கல் வாங்கல்களின் பந்தம் (சிக்கிக்கொள்ளல்) கன்மமலபந்தம் போன்றவற்றிலிருந்து] விடுதலை பெறுகிறாள்; இதிற் சந்தேகமில்லை; அப்படிச் செபிக்கிறவனுக்கு அவமரணமும் (துர்மரணம்), அகாலமரணமும் எப்பொழுதும் உண்டாகா (17);

[அவன்] இவ்வுலகில் புதல்வர் பேரப்பிள்ளைகள் நல்ல உறவினர் நண்பர்களுடன் சுகமாக வாழ்ந்து ஆயுள் முடிவிலே கைலாசத்தையடைந்து என் சந்நிதியிற் சேவிக்கும் பதவியை அடைவான் (18):

தஸ்மாத் ஸர்வ ப்ரயத்நேந ஜபேந் நித்யம் அதந்த்ரித꞉ | (19)

யே பக்தியுக்தா꞉ கவசம் படந்தி
தே வை குலே ஸ்வே தநிநோ வஸந்தி |
தேஜோதிகம் விம்சதி ஸங்க்யயா திநே
கைலாஸம் ஆப்நோதி மம ப்ரஸாதாத் || (20)

முடிவுரை :

ஏதத் தே கதிதம் தேவி! யந் மாம் த்வம் பரிப்ருச்சஸி |
த்வத் ஸ்நேஹாதிசயா துக்தம் கவசம் பைரவாத்மகம் || (21)

தேவிக்குச் சிவபிரான் சொல்லியருளிய
(3) ஸ்ரீ வடுக பைரவ கவசம் முற்றிற்று.

---

அதனால், பெருமுயற்சியுடன் சோம்பலின்றித் தினமுஞ் செபிக்கக்கடவன் (19);

எவர் பக்தியுடன் இக் கவசத்தை [நியமமாகப்] படிப்பாரோ, அவர் தம் இல்லத்திற் செல்வராய் வாழ்வர்; தினமும் இருபது உரு (முறை) வீதம் செபித்துவந்தால் (படித்தால்) இம்மையில் பிரம்மதேஜஸை (தேக காந்தி உள்ளொளியாகிய தத்துவஞானப்பிரகாசம் இவைகளை) என் அருளால் பெற்று [மறுமையிற்] கைலாசத்தை அடைவான் (20);

தேவீ! எக்காரணத்தால் என்னை நீ பரிந்து மிகவும் கேட்டனையோ, அக் காரணத்தால் (அறிவிக்குங் காரணத்தால்) இது உனக்கு விவரிக்கப்பட்டது; உன் அன்பின் பெருக்கினலே பைரவ சம்பந்தமான இக் கவசம் சொல்லப்பட்டது; (21)

உ

# கால பைரவாஷ்டகம்

தேவராஜ ஸேவ்யமாந பாவநாங்க்ரி பங்கஜம்
வ்யாள யஜ்ஞ ஸூத்ரமிந்து சேகரம் க்ருபாகரம் |
நாரதாதி யோகிப்ருந்த வந்திதம் திகம்பரம்
காசிகாபுராதிநாத காலபைரவம் பஜே || (1)

பாநு கோடி பாஸ்வரம் பவாப்தி தாரகம் பரம்
நீலகண்டம் ஈப்ஸிதார்த்த தாயகம் த்ரி லோசநம் |
காலகாலம் அம்புஜாக்ஷம் அக்ஷசூலம் அக்ஷரம்
காசிகாபுராதிநாத காலபைரவம் பஜே || (2)

சூல டங்க பாசதண்ட பாணிம் ஆதி காரணம்
ச்யாமகாயம் ஆதிதேவம் அக்ஷயம் நிராமயம் |
பீம விக்ரமம் ப்ரபும் விசித்ர தாண்டவ ப்ரியம்
காசி காபுராதிநாத காலபைரவம் பஜே || (3)

---

தலைமைத் தேவர்களால் வணங்கப்படும் தூய திருவடித் தாமரைகளையுடையவரும், நாகபாம்பினைப் பூணூலாக அணிந்தவரும், பிறைசூடியவரும், கருணை நிறைந்தவரும், நாரதர் முதலிய முனிவர் திரளால் வணங்கப்பட்டவரும், நிர்வாண கோலத்தினருமாகிய காசி நகர [பரிபாலன] முதன்மைத் தலைவராயுள்ள கால வைரவக் கடவுளைத் தியானித்து வணங்கித் துதிக்கின்றேன். (1)

கோடி சூரியனையொத்த ஒளியினரும், பிறவிக் கடலைக் கடப்பிப்பவரும், மேலான கடவுளும், நீலநிறமான கழுத்தினரும், [பக்தர்களுக்கு] வேண்டும் பொருள்களைக் கொடுப்பவரும், முக்கண்ணரும், யமதர்மராஜனிலும் மேலான சங்காரமூர்த்தியும், செந்தாமரை மலர்போலுங் கண்களையுடையவரும், உருத்திராட்சமாலை சூலம் என்பவற்றைத் தரித்தவரும், அழிவில்லாதவருமாகிய காசி நகர பரிபாலன முதன்மைத் தலைவராய் எழுந்தருளியிருக்கும் கால வைரவக் கடவுளைப் போற்றுகின்றேன். (2)

சூலம் உளி பாசம் தண்டம் இவ்வாயுதங்களைத் தாங்கிய கையினரும், உலகுயிர்களுக்கு முதன்மைக் காரணரும், கருமேனியரும் தேவாதிதேவரும், அழிவில்லாத ஆற்றலுடையவரும், நிராமயரும் (எவ்வித நோயுமற்றவர்), பயங்கரமான பராக்கிரமச் செயல்களையுடையவரும், திருமாலாதி யாவரையும் தம் ஆணையின்படி நடாத்துபவரும், அற்புதமான தாண்டவஞ் செய்தலில் விருப்பினருமாகிய காசி நகரக் கால வைரவக் கடவுளைப் போற்றுகின்றேன். (3)

புக்தி முக்தி தாயகம் ப்ரசஸ்த சாரு விக்ரஹம்
நிதாந்த பக்த வத்ஸலம் ஸமஸ்த லோக விக்ரஹம் |
நிக்வணந் மனோஜ்ஞ ஹேம கிங்கிணீ லஸத் கடிம்
காசிகாபுராதிநாத காலபைரவம் பஜே || (4)

தர்ம ஸேது பாலகம் த்வதர்ம மார்க்க நாசகம்
கர்ம பாச மோசகம் ஸுதர்ம தாயகம் விபும் |
ஸ்வர்ண வர்ண கேச பாச சோபிதாங்க மண்டலம்
காசிகாபுராதிநாத காலபைரவம் பஜே || (5)

ரத்ந பாதுகா ப்ரபாபிராம பாத யுக்மகம்
நித்யம் அத்விதீயம் இஷ்ட தைவதம் நிரஞ்ஜநம் |
ம்ருத்யு தர்ப்ப நாசகம் கராள தம்ஷ்ட்ர பீஷணம்
காசிகாபுராதிநாத காலபைரவம் பஜே || (6)

---

உலக போகங்களையும் மோக்ஷத்தையும் கொடுத்தருள்பவரும், புகழத்தக்க அழகிய சாத்துவிக குணமய மூர்த்தமான திருமேனியையுடையவரும், அயரா அன்பினையுடைய அடியார்கள் இடத்துக் கருணைகூர்பவரும், [சர்வ வியாபகத் தன்மையால்] எல்லாவுலகும் தமக்கு மேனியாய் அமைந்தவரும், ஒலிக்கின்ற அழகிய பொற்சதங்கை மாலையை இடுப்பில் அணிந்தவரும் ஆகிய காசி நகரக் கால வைரவக் கடவுளைப் போற்றுகின்றேன். (4)

தருமங்களை வரம்பழியாமற் காப்பவரும், அதர்மங்களாகிய பாவநெறிகளை ஒழிப்பவரும், இருவினைப் பாசபந்தங்களினின்றும் நீக்குபவரும், சிறந்த புண்ணியமாகிய சிவபுண்ணியங்களிற் செலுத்துபவரும், சர்வ வியாபகரும், பொன்னிறமாய சடைபாசாயுதம் இவற்றோடு விளங்கும் திருமேனியின் காந்தியை உடையவரும் ஆகிய காசி நகரக் கால வைரவக் கடவுளைப் போற்றுகின்றேன்.

இரத்தினங்கள் பதித்த பொற்பாதுகைகளின் ஒளியுடன் அழகுற விளங்கும் இரண்டு திருவடிகளையுடையவரும், நித்தியரும், ஒப்பற்றவரும், [தம் குலதெய்வமாகக் கொண்டு] விரும்பிப் போற்றப்படும் அநுக்கிரகத் தெய்வமும், குற்றமில்லாதவரும், அகால மரணத்தின் உக்கிரத்தை ஒழிப்பவரும், கொடிய வக்கிர தந்தங்களையுடைமையால் பயங்கர (தாமதகுண மூர்த்தமாய) வடிவினரும் ஆகிய காசி நகரத்து எழுந்தருளியுள்ள கால வைரவக் கடவுளைப் போற்றுகின்றேன். (6)

அட்டஹாஸ பிந்ந பத்மஜாண்ட கோச ஸந்ததிம்
திருஷ்டி பாத நஷ்ட பாப ஜாலம் உக்ரசாஸநம் |
அஷ்ட ஸித்தி தாயகம் கபால மாலிகா தரம்
காசிகாபுராதிநாத காலபைரவம் பஜே || (7)

பூத ஸங்க நாயகம் விசால கீர்த்தி தாயகம்
காசி வாஸ லோக புண்ய பாப சோதகம் விபும் |
நீதி மார்க்க கோவிதம் புராதநம் ஜகத் பதிம்
காசிகாபுராதிநாத காலபைரவம் பஜே || (8)

கால பைர வாஷ்டகம் படந்தி யே மநோஹரம்
ஜ்ஞாந முக்தி ஸாதநம் ஸ்வபுஷ்டி புண்ய வர்த்தநம் |
சோக மோஹ தைந்ய லோப கோப தாப நாசநம்
தே ப்ரயாந்தி கால பைர வாங்க்ரி ஸந்நிதிம் த்ருவம் || (9)

---

தமது பேரொலி நகைப்பினாலே பிரமாண்டகோசக் கூட்டத்தைப் பிளவுபடச் செய்பவரும், தம் திருவருள் நோக்கத்தினாலே அடியவர்களின் பாவத்திரளை அழிப்பவரும், உக்கிரமான (கண்டிப்பான) ஆஞ்ஞையினையுடையவரும், அஷ்டமகா சித்திகளைக் கொடுப்பவரும், பிரம கபால மாலையினையணிந்தவரும் ஆகிய காசி நகரத்துக் கால வைரவக் கடவுளைப் போற்றுகின்றேன். (7)

பூதகணத் தலைவரும், பரந்த கீர்த்தியைக் கொடுத்தருள்பவரும், காசி ஸ்தல வாசிகளாகிய சனங்களின் புண்ணிய பாவங்களைப் பரிசோதனை செய்பவரும், சர்வ வியாபகரும், நீதி நெறிகளையறிந்தவரும், அநாதியானவரும், சர்வலோக நாயகரும் ஆகிய காசி நகரத்துக் கால வைரவக் கடவுளைப் போற்றுகின்றேன். (8)

மனத்துக்கு மகிழ்ச்சியையுண்டுபண்ணுவதும், தத்துவ (சிவ) ஞானம் முத்தியின்பம் எய்துதற்குக் கருவியாயதும், தேக ஆரோக்கியம் பலம் புண்ணியமிவற்றை அபிவிருத்திசெய்வதும், துக்கம் மோகம் (மயக்கவுணர்வு) வறுமை உலோபகுணம் கோபம் பொறாமை என்ற ஒழிக்கும் சாதனமும் ஆகிய இந்தக் கால வைரவ அஷ்டகத் தோத்திரத்தினை எவர் பாராயணஞ் செய்வாரோ, அவர் கால வைரவக் கடவுளின் திருவடிப் பேற்றினை (திருவருட்பேற்றை) எய்துவர். இது நிச்சயம். (9)

உ

# ஸ்ரீ வடுக பைரவ அஷ்டோத்ர சத நாமாவளி

1. ஓம் பைரவாய நம:
2. ஓம் பூத நாதாய நம:
3. ஓம் பூதாத்மநே நம:
4. ஓம் பூத பாவநாய நம:
5. ஓம் க்ஷேத்ரஜ்ஞாய நம:
6. ஓம் க்ஷேத்ர பாலாய நம:
7. ஓம் க்ஷேத்ரதாய நம:
8. ஓம் க்ஷத்ரியாய நம:
9. ஓம் விராடாய நம:
10. ஓம் ச்மசாந வாஸிநே நம:
11. ஓம் மாம்ஸாசிநே நம:
12. ஓம் கர்ப்பராசிநே நம:
13. ஓம் ஸ்மராந்தகாய நம:
14. ஓம் ரக்தபாய நம:
15. ஓம் பாநபாய நம:
16. ஓம் ஸித்தாய நம:
17. ஓம் ஸித்திதாய நம:
18. ஓம் ஸித்திஸேவிதாய நம:
19. ஓம் கங்காளாய நம:
20. ஓம் காலக்ஷமநாய நம:
21. ஓம் கலாகாஷ்டாய நம:
22. ஓம் தநவே நம:
23. ஓம் கவயே நம:
24. ஓம் த்ரிநேத்ராய நம:
25. ஓம் பஹுநேத்ராய நம:
26. ஓம் பிங்கள லோசனாய நம:
27. ஓம் சூலபாணயே நம:
28. ஓம் கட்க பாணயே நம:
29. ஓம் கபாலிநே நம:
30. ஓம் தூம்ரலோசநாய நம:
31. ஓம் அபீரவே நம:
32. ஓம் பைரவீநாதாய நம:
33. ஓம் பூதபாய நம:
34. ஓம் யோகிநீ பதயே நம:
35. ஓம் தநதாய நம:
36. ஓம் தநஹாரிணே நம:
37. ஓம் தநவதே நம:
38. ஓம் ப்ரீதிவர்த்தநாய நம:
39. ஓம் நாக ஹாராய நம:
40. ஓம் நாக பாசாய நம:
41. ஓம் வ்யோமகேசாய நம:
42. ஓம் கபால ப்ருதே நம:
43. ஓம் காலாய நம:
44. ஓம் கபாலமாலிநே நம:
45. ஓம் கமநீயாய நம:
46. ஓம் கலாநிதயே நம:
47. ஓம் த்ரிலோசநாய நம:
48. ஓம் ஜ்வலந் நேத்ராய நம:
49. ஓம் த்ரிசிகிநே நம:
50. ஓம் த்ரிலோகபாய நம:
51. ஓம் த்ரிநேத்ரதநயாய நம:
52. ஓம் டிம்பாய நம:
53. ஓம் சாந்தாய நம:
54. ஓம் சாந்த ஜநப்ரியாய நம:
55. ஓம் வடுகாய நம:
56. ஓம் வடுவேசாய நம:
57. ஓம் கட்வாங்க தாரகாய நம;
58. ஓம் பூதாத்யக்ஷாய நம;
59. ஓம் பசுபதயே நம:
60. ஓம் பிக்ஷுகாய நம:
61. ஓம் பரிசாரகாய நம:
62. ஓம் தூர்த்தாய நம:
63. ஓம் திகம்பராய நம:
64. ஓம் சூராய நம:
65. ஓம் ஹரிணே நம:
66. ஓம் பாண்டுலோசநாய நம:
67. ஓம் ப்ரசாந்தாய நம:
68. ஓம் சாந்திதாய நம:
69. ஓம் ஸித்தாய நம!
70. ஓம் சங்கரப்ரிய பாந்தவாய நம:
71. ஓம் அஷ்டமூர்த்தயே நம:
72. ஓம் நிதீசாய நம:
73. ஓம் ஜ்ஞான சக்ஷுஷே நம:
74. ஓம் தபோ மயாய நம:

75. ஓம் அஷ்டாதாராய நம:
76. ஓம் ஷடாதாராய நம:
77. ஓம் ஸர்ப்ப யுக்தாய நம:
78. ஓம் சிகி ஸகாய நம:
79. ஓம் பூதராய நம:
80. ஓம் பூதராதீசாய நம:
81. ஓம் பூ பதயே நம:
82. ஓம் பூதராத்மஜாய நம:
83. ஓம் கங்காள தாரிணே நம:
84. ஓம் முண்டிநே நம:
85. ஓம் அந்த்ர யஜ்ஞோபவீதிநே நம:
86. ஓம் ஜ்ரும்பணாய நம:
7. ஓம் மோஹநாய நம:
88. ஓம் ஸ்தம்பிநே நம:
89. ஓம் மாரணாய நம:
90. ஓம் க்ஷோபணாய நம:
91. ஓம் சுத்த நீலாஞ்ஜந ப்ரக்யாய நம:
92. ஓம் தைத்யக்நே நம:
93. ஓம் முண்ட பூஷிதாய நம:
94. ஓம் பலிபுஜே நம:
95. ஓம் பலிபுங் நாதாய நம:
96. ஓம் பாலாய நம:
97. ஓம் பாலபராக்ரமாய நம:
98. ஓம் ஸர்வாபத் தாரணாய நம;
99. ஓம் துர்க்காய நம:
100. ஓம் துஷ்டபூத நிஷேவிதாய நம:
101. ஓம் காமிநே நம:
102. ஓம் கலாநிதிநே நம:
103. ஓம் காந்தாய நம:
104. ஓம் காமிநீ வசக்ருத் வசிநே நம:
105. ஓம் ஸர்வ ஸித்தி ப்ரதாய நம;
106. ஓம் வைத்யாய நம:
107. ஓம் ம்ரபவே நம:
108. ஓம் விஷ்ணவே நம: